

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (26.11.2024) தலைமைச் செயலகத்தில், தெற்கு வங்கக் கடல் பகுதியில், காற்றழுத்த தாழ்வு மண்டலம் நிலை கொண்டுள்ளதைத் தொடர்ந்து தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் கனமழை முதல் அதிகனமழை வரை பெய்யக்கூடும் என்ற இந்திய வானிலை ஆய்வு மையத்தின் அறிவிக்கையை தொடர்ந்து கனமழையினை எதிர்கொள்ள மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், கூடுதல் தலைமைச் செயலர் / வருவாய் நிருவாக ஆணையர் ராஜேஷ் லக்கானி, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை முதன்மைச் செயலர் திருமதி பெ.அமுதா, துறைச் செயலாளர்கள், அரசு உயர் அலுவலர்கள் மற்றும் காணொலிக் காட்சி வாயிலாக தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், கடலூர், விழுப்புரம் மற்றும் மயிலாடுதுறை ஆகிய மாவட்டங்களின் ஆட்சித் தலைவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### கனமழை எச்சரிக்கை: காணொலி மூலம்

# முதல்வர் மு.க.ஸ்டாலின் - 6 மாவட்ட ஆட்சியர்களுடன் ஆய்வு!

## நிவாரண முகாம்கள் அமைத்து தயார் நிலையில் இருக்க உத்தரவு!

சென்னை, நவ.28-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (26.11.2024) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் கனமழை முதல் அதிகனமழை வரை பெய்யக்கூடும் என்ற இந்திய வானிலை ஆய்வு மையத்தின் அறிவிப்பைத் தொடர்ந்து கனமழையினை எதிர்கொள்ள டெல்டா மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இதில் காணொலிக் காட்சி வாயிலாக மயிலாடுதுறை, விழுப்புரம், நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர் மற்றும் கடலூர் மாவட்ட ஆட்சியர்கள் கலந்து கொண்டனர்.

முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, மயிலாடுதுறை, நாகப்பட்டினம், திருவாரூர் மற்றும் கடலூர் மாவட்டங்களில் மாவட்ட நிருவாகத்து டன் ஒருங்கிணைந்து ஆய்வுத் நடவடிக்கைகளை இந்திய ஆட்சிப் பணி நிலையிலான மாவட்ட கண்காணிப்பு அலுவலர்கள் கண்காணித்து வருகின்றனர்.

**நடவடிக்கைகளைக் கேட்டறிந்தார்!**

இக்கூட்டத்தின்போது, முதலமைச்சர் அவர்கள், அதிகனமழை எச்சரிக்கை வரப்பெற்ற மாவட்டங்களான மயிலாடுதுறை, விழுப்புரம், நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர் மற்றும் கடலூர் மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் கண்காணிப்பு அலுவலர்களுடன் காணொலி வாயிலாக தொடர்பு கொண்டு அம்மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து கேட்டறிந்தார்.

இந்த மாவட்டங்களில் போதுமான நிவாரண முகாம்கள் தயார் நிலையில் உள்ளதா, பாதிப்பிற்குள்ளாகும் பகுதிகளுக்கென பல்துறை மண்டலக் குழுக்கள், மருத்துவக் குழுக்கள் மற்றும் தேவையான உபகரணங்கள் கண்டறியப்பட்டு தயார் நிலையில் உள்ளன என்று இந்த ஆய்வின்போது மாவட்ட ஆட்சியர்கள் தெரிவித்தனர்.

குறிப்பாக, அதிக மழைபொழிவினை பெற்றுவரும் நாகப்பட்டினம் மாவட்டத்தில், 125 JCB இயந்திரங்கள், 75 படகுகள், 250 ஜெனரேட்டர்கள், 281 மர அறுப்பான்கள்; கடலூர் மாவட்டத்தில் 242 JCB இயந்திரங்கள், 51 படகுகள், 28 ஜெனரேட்டர்கள், 104 மர அறுப்பான்கள், 58 மோட்டார் பம்புகள்; மயிலாடுதுறை மாவட்டத்தில், 85 JCB இயந்திரங்கள், 70 படகுகள், 164 ஜெனரேட்டர்கள், 57 மர அறுப்பான்கள், 34 மோட்டார் பம்புகள்; திருவாரூர் மாவட்டத்தில் 125 JCB இயந்திரங்கள், 18 படகுகள், 142 ஜெனரேட்டர்கள், 73 மர அறுப்பான்கள், 18 மோட்டார் பம்புகள்; தஞ்சாவூர் மாவட்டத்தில் 59 JCB இயந்திரங்கள், 29 படகுகள், 69 ஜெனரேட்டர்கள், 711 மர அறுப்பான்கள், 42 மோட்டார் பம்புகள் ஆகியவை தயார் நிலையில் உள்ளன என்று மாவட்ட ஆட்சியர்கள் தெரிவித்தனர்.

**மீட்பு நடவடிக்கைகள் தயார்!**

முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி முன்னெச்சரிக்கையாக திருவாரூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், கடலூர் ஆகிய மாவட்டங்களுக்கு தலா ஒரு தேசிய பேரிடர் மீட்பு படை குழுவும், மாநில பேரிடர் மீட்புப் படை குழுவும் விரைந் துள்ளனர். தஞ்சாவூர் மாவட்டத்திற்கு 2 தேசிய பேரிடர் மீட்புப் படை குழுவும் விரைந்துள்ளது. மேலும், மேற்படி மாவட்டங்களில் பாதிப்பிற்குள்ளாகும் பகுதிகளில் பேரிடர் மீட்பு மற்றும் நிவாரண பணிகளுக்கு முதல்நிலை மீட்பாளர்கள் மற்றும் தன்னார்வலர்கள் தயார் நிலையில் உள்ளனர்.

ஏற்கெனவே, மீனவர்கள் கடலுக்கு செல்வதை தடுக்க அறிவுரை வழங்கப்பட்டு பெரும்பான்மை படகுகள் கரை திரும்பியுள்ளன. ஆழ்கடலில் மீன்பிடிக்கச் சென்றுள்ள படகுகள் அருகில் உள்ள துறை முகங்களுக்கு செல்ல நவீன தொலைத் தொடர்பு சாதனங்களுடன் தகவல் அளிக்கப்பட்டுள்ளது. மாநில மற்றும் மாவட்ட அவசரகால செயல்பாட்டு மையங்கள் பல்துறை அலுவலர்களுடன் 24 மணி நேரமும் செயல்பட்டு வருகின்றன.

இந்த ஆய்வுக் கூட்டத்தில், முதலமைச்சர் அவர்கள் நிவாரண முகாம்களை அனைத்து வசதிகளுடன் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும் என்றும், கனமழையின்ன போது பொதுமக்களை தாழ்வான பகுதிகளிலிருந்து முன்கூட்டியே நிவாரண முகாம்களுக்கு அழைத்து வரவேண்டும் என்றும், வெள்ளநீர் தேங்கி பயிர்கள் சேதமடையாமல் இருக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும், மின்சார வசதி தடையின்றி கிடைத்திட தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும் அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

**விழுப்புரம் மாவட்ட கள ஆய்வு ஒத்திவைப்பு!**

விழுப்புரம் மாவட்டத்தில் கனமழை பெய்யக்கூடும் என்ற இந்திய வானிலை ஆய்வு மையத்தின் அறிவிப்பைத் தொடர்ந்து, 28.11.2024 மற்றும் 29.11.2024 ஆகிய நாட்களில் விழுப்புரத்தில் முதலமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெறவிருந்த அரசு நிகழ்ச்சி மற்றும் கள ஆய்வு கூட்டம் ஒத்திவைக்கப்படுகிறது. இதற்கான தேதிகள் விரைவில் அறிவிக்கப்படும்.

இக்கூட்டத்தில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், தலைமைச்செயலாளர் நா.முருகானந்தம், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி சுப்ரியா சாகு, கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் ராஜேஷ் லக்கானி, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, நீர்வளத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க. மணிவாசன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை முதன்மைச் செயலாளர் திருமதி பெ.அமுதா, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா. கார்த்திகேயன், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ. குமரகுருபரன், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான நிறுவன மேலாண்மை இயக்குநர் நந்தகுமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

### கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம்

## காவேரிப்பட்டணம் மேற்கு ஒன்றியம் - காவேரிப் பட்டணம் பேரூர்க் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

### தலைமைக் கழக அறிவிப்பு

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம், காவேரிப்பட்டணம் மேற்கு ஒன்றியம், காவேரிப்பட்டணம் பேரூர்ச் செயலாளர் ஜேகேஎஸ். பாபு சரிவர கழகப் பணியாற்றாத காரணத்தால், அவரை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, கழகப் பணிகள் செவ்வனே நடைபெற அவருக்குப் பதிலாக **ஜேகேஎஸ். சாஜித்** (50, போதையநாயுடு, காவேரிப்பட்டணம், கிருஷ்ணகிரிமாவட்டம்)அவர்கள்காவேரிப் பட்டணம் பேரூர்க் கழகப் பொறுப்பாளராகநியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்டபேரூர்க் கழக அமைப்பின் பிறநிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600 018
நாள்- 26.11.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

---

### தி.மு.க. விவசாய அணி

## புதுக்கோட்டை தெற்கு மாவட்ட அமைப்பாளர் நியமனம்!

### விவசாய அணிச் செயலாளர் ஏ.கே.எஸ்.விஜயன் அறிவிப்பு!

புதுக்கோட்டை தெற்கு மாவட்ட விவசாய அணியின் அமைப்பாளராக ஏற்கனவே நியமிக்கப்பட்ட எஸ். சுந்தரபாண்டியன்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டதால், அவருக்கு பதிலாக **ஆர். சிவக்குமார்,** டிசிஇ., டிஏஇ., (ஒத்த வீடு, வி.லெட்சுமிபுரம், திருமயம் தாலுகா, புதுக்கோட்டை மாவட்டம்) அவர்கள் புதுக்கோட்டை தெற்கு மாவட்ட விவசாய அணியின் அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே நியமிக்கப்பட்ட மாவட்ட விவசாய அணி நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றிட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 26.11.2024

**ஏ.கே.எஸ்.விஜயன்**
செயலாளர்,
தி.மு.க. விவசாய அணி

---



கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் நல்வாழ்த்துக்களுடன், கழக இளைஞரணி செயலாளரும், தமிழ்நாடு துணை முதல்வருமான, உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு கரூர் மாவட்டக் கழகச் செயலாளரும், மின்சாரம் மதுவிலக்கு – ஆயத்தீர்வைத்துறை அமைச்சருமான வி.செந்தில் பாலாஜி வழிகாட்டுதலில், கரூர் மாவட்டம் முழுவதும் அன்னதானம், இனிப்பு, நோட்டு புத்தகங்கள் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கி கொண்டாடப்பட்டது. கரூர் மாவட்ட கழகம் சார்பில் கரூர் வெண்ணைமலை அன்புக்கரங்கள் இல்லத்தில் கழக நிர்வாகிகள் உணவு வழங்கினர்.

---





கழக இளைஞர் அணிச் செயலாளர் – துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழா – மற்றும் கழக ஆக்கப் பணிகள் குறித்து ஆலோசிக்க தி.மு.க. வர்த்தகர் அணிச் செயலாளர் கவிஞர் காசி.முத்துமாணிக்கம் தலைமையில் அண்ணா அறிவாலயத்தில் அணி ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இதில் உயர் கல்வித் துறை அமைச்சர் கோவி.செழியன், மாநில நிர்வாகிகள், மாவட்ட அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளை

# கழக வர்த்தகர் அணியினர் ஒரு மாதத்திற்கு நல உதவிகள் வழங்கி சிறப்பாக கொண்டாடுவோம்!

## மாநில நிர்வாகிகள் கூட்டத்தில் தீர்மானம்! கவிஞர் காசிமுத்து மாணிக்கம் அறிக்கை!

சென்னை, நவ.28-

தி.மு.க. வர்த்தகர் அணிச் செயலாளர் கவிஞர் காசிமுத்துமாணிக்கம் தலைமையில் அண்ணா அறிவாலயத்தில் 25.11.2024 அன்று துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 48வது பிறந்தநாள் குறித்தும், கழக வளர்ச்சி குறித்தும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அத்தீர்மானங்கள் வருமாறு:-

நில்லாமல் சுழலும் நிர்வாகப் பம்பரமாய் சுழன்று. நினைத்ததை முடிக்கும் புயல் வேக செயல்திறன் கொண்ட முதல்வரை இம்மாமன்றம் பாராட்டி மகிழ்கிறது.

ஒற்றை செங்கல்லால் எய்ம்ஸ் கட்டிடம் கட்டிட முடியாது. ஆனால் ஒற்றை செங்கலால் நாடாளுமன்ற கட்டிடத்தையே அசைக்க முடியும் எனக்காட்டிய தோடு, நீட் தேர்வுக்கு எதிர்ப்பாக நாடு முழுவதும் கையெழுத்து இயக்கத்தை அஞ்சல் அட்டை மூலம் அனுப்பி இந்தியாவையே நீட் தேவையா என சிந்திக்க வைத்ததோடு, தமிழகம் வறண்டுபோய் இருந்த காலகட்டத்தில் இளைஞர் அணி மூலம் தூர் எடுத்தும். முத்தமிழறிஞர் படிப்பகம் தந்தும், 234 தொகுதிகளிலும் பாசறை பயிற்சி கூட்டங்கள் நடத்தியும், தொகுதிக்கு 10.000 வீதம் 234 தொகுதிகளிலும் முப்பது லட்சம் கழக புதிய உறுப்பினர் சேர்ப்பு எனவும், மழைகாலத்தில் நள்ளிரவு இரண்டு மூன்று மணி என போட்டி போட்டு உழைத்து கடந்த தேர்தலில் "சுற்றிப் பகைவர் கோடி சூழினும் சூறைக்காற்றாய் சுழன்றவர்" என்று கூறும் அளவு செயல்பட்டு சேலம் இளைஞர் அணி மாநாட்டை திறம்பட நிரூபித்தவர் தமிழகத்தின் துணை முதல்வர். அவரின் 48வது பிறந்தநாளை, வர்த்தக அணியின் சார்பில் டிசம்பர் 26 வரை ஒருமாதத்திற்கு பிறந்த குழந்தைகளுக்கு மோதிரம் உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளை ஆங்காங்கே நடத்துவது என முடிவு செய்யப்பட்டது.

கழக வர்த்தகர் அணியில் துணைத்தலைவராக திறம்பட செயல்பட்டவரும் எங்கள் ஆருயிர் சகோதரர் முனைவர் கோ.வி. செழியன் அவர்களை உயர்கல்வித் துறை அமைச்சராக்கி அழகு பார்த்த முதல்வரை இம்மாமன்றம் நன்றியுடன் பாராட்டுகிறது.

மூன்று மாதங்களுக்கு ஒரு முறை வணிகர் சங்கப் பிரதிநிதிகளை அழைத்து ஒன்றிய அரசு ஜி.எஸ்.டி. வரிவிதிப்பு சம்பந்தமாய் ஆலோசனை நடத்திட வேண்டும்.

தி.மு.க. வர்த்தகர் அணி நிர்வாகிகளில் பெரும்பான்மையோர் ஜி.எஸ்.டி. கட்டும் வணிகர்களே. அவர்களில் சிலரையாவது வணிகர் நலன் வாரிய குழுவில் உறுப்பினராக சேர்க்க வேண்டும்.

வெள்ள பாதிப்புக்கு உட்பட்ட கடைக்காரர்களுக்கு இதுவரை ஒன்றிய அரசு ஒரு உதவியும் செய்யாததுடன், தமிழகத்திற்கு நிதி ஒதுக்காமலிருக்கும் ஒன்றிய அரசை கண்டித்தோம்.

**தனி உணவகங்களின் வரியை தள்ளுபடி செய்க!**

தனி உணவகங்களில் உணவுக்கு 5 சதவீதம் ஜீ.எஸ்.டி. விதிக்கப்படுகிறது. அதே உணவகங்களில் வாடகை கட்டிடத்திற்கு 10 சதவித ஜி.எஸ்.டி. வரி விதிக்கப்படுகிறது. எனவே தனி உணவங்களின் மீதான வரியை தள்ளுபடி செய்யவேண்டும்.

அரிசி மற்றும் உணவுப் பொருட்கள் 26 கிலோவுக்கு மேல் பைகளில் அடைத்து விற்பதற்கு இதுவரை வரிவிதிப்பு இல்லை. ஆனால் தற்போது 26 கிலோவுக்கு மேல் அடைக்கப்பட்ட அனைத்து உணவுப் பொருட்களுக்கும் ஜி.எஸ்.டி. வரம்பிற்குள் கொண்டு வரப்படும் என்று அறிவிக்க இருக்கும் சட்ட முன்வடிவை தடுத்திடக் கோருகிறோம்.

சுயமரியாதை சுடராம் தங்கத்தளபதி தமிழ்நாடு முதல்வரின் விருப்பப்படி தமிழ்நாட்டின் வணிக நிறுவனங்களில் தமிழில் பெயர் பலகை வைப்பது என்றும். தமிழில் பெயர் பலகை வைக்காத கடைகளின் முன்பு தலைமைக்கழகத்தின் அனுமதியுடன் வர்த்தகர் அணி சார்பில் ஆர்பாட்டம் நடைபெறும் என்றும் முடிவு செய்யப்பட்டது.

திருவள்ளூர் மாவட்டம் பட்டாபிராமில் 11.41 ஏக்கர் பரப்பளவில் 330 கோடி செலவில் டைடல் பூங்கா அமைத்து, 6000 இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்கும் வகையில்... மிகப்பெரிய தொழிற் பூங்காவை நாட்டுக்கு அர்ப்பணித்த... நமது 'தாய் உள்ளம் கொண்ட' தமிழ்நாடு முதல்வர் அவர்களை வர்த்தகர் அணியின் சார்பில் பெரு மகிழ்ச்சியுடன் முதலில் வரவேற்று மனதார வாழ்த்துகிறோம்.!! பாராட்டுகிறோம்.

இந்தியாவில் இதுவரை எவரும் சாதிக்காத வகையில்... தமிழகத்தை விளையாட்டு மாநகரமாக மாற்றி... ஏழை எளிய நடுத்தர பள்ளி, கல்லூரி மாணவ மாணவிகளிடம் விளையாட்டில் அவசியத்தை தான் செல்லும் இடங்களில் எல்லாம் எடுத்துரைத்து... இன்று ஆசிய கண்டமே வியந்து பெரிதும் போற்றி பாராட்டிடும் வகையில்... உலகத் தரமான பல்வேறு விளையாட்டுப் போட்டிகளை தமிழ்நாட்டில் வெற்றிகரமாக நடத்திக் காட்டி வெளிநாட்டில் போட்டிக்கு செல்லும் நமது நாட்டு விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கு உரிய தருணத்தில் ஊக்கப் பரிசுகளையும் கூடுதலாக அளித்து... தமிழ்நாட்டின் தன்னிகரில்லா விளையாட்டுத் துறை அமைச்சராக எதிர்க்கட்சிணரும் வியந்து பாராட்டும் வகையில் பணியாற்றி இன்று துணை முதல்வராக பதவி உயர்வு பெற்று தமிழகம் முழுவதும் சுற்றி சுழன்று அனைத்து தரப்பு மக்களின் நன்மதிப்பை பெரிதும் பெற்றுள்ள மாண்புமிகு துணை முதல்வர் அவர்களையும் தி.மு.கழக வர்த்தகர் அணியின் சார்பில் மனதார பாராட்டி வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

பெருநகர சென்னை மாநகராட்சி தொழில் வணிக உரிமம் 3 ஆண்டுகளுக்கு 1 முறை புதுப்பிக்கும் நடைமுறை சட்டத்தை தமிழக வணிகர்களின் நலன் பேணும் வகையில் கொண்டு வந்த முதல்வர் அவர்களுக்கு நன்றியை தெரிவிப்பதோடு... பல மடங்கு உயர்த்தப்பட்ட தொழில் வணிக உரிமத்தின் கட்டணத் தொகையை வணிகர்களின் இன்றைய சூழ்நிலையை கருதி சற்று குறைக்கவும் வேண்டுகிறோம்.

வாடகைக்கு கடை நடத்தும் சிறிய நடுத்தர வணிகர்கள் தாங்கள் கடைகள் மூலம் உரிமையாளர்களுக்கு செலுத்தும் வாடகையில் 18 சதவீதம் ஜிஎஸ்டி வரி கட்ட வேண்டும் என தற்போது அறிவித்துள்ள ஒன்றிய அரசின் அறிவிப்பினை...ஏழை எளிய வணிகர்களின் வாழ்வாதாரம் கருதி உடனடியாக திரும்பப் பெற வேண்டும் என தி.மு. கழக வர்த்தகர் அணி சார்பில் ஒன்றிய அரசை வலியுறுத்துவதுடன் முதல்வர் அவர்கள் இதற்கு உடனடியாக அழுத்தம் கொடுத்து... ஒன்றிய அரசு உடனடியாக இந்த அரசாணையை திரும்ப பெற துணை நிற்க வேண்டுமென பணிவுடன் வேண்டுகிறோம்.

வாய் புற்று நோய்களை உருவாக்கும் பான் மசாலா குட்கா போன்ற புகையிலை பொருள்கள் தமிழ்நாட்டில் தடை செய்யப்பட்டுள்ளது. இச்சட்டத்தை அமுல்படுத்த தமிழக முதல்வர் கடும் தொடர் நடவடிக்கைகளை எடுத்து கட்டுப்படுத்தி வருகிறார்கள்.

இத்தருணத்தில் அண்டை மாநிலங்களில் இருந்து சில நேரங்களில் இப்பொருள்களை தமிழ்நாட்டில் வேலைக்கு வருகை தருவோர் கொண்டு வந்து அரசிற்கு கெட்ட பெயர் ஏற்படுத்த முற்படுகின்றனர் எனவே உடல் நலத்திற்கு தீங்கு விளைவிக்கும் பான் மசாலா குட்கா மற்றும் புகையிலை பொருட்களை இந்திய அளவில் உற்பத்தி நிலையிலேயே ஒன்றிய அரசு உடனடியாக தடை விதிக்க வேண்டுமென வர்த்தகர் அணியின் சார்பில் வேண்டுகிறோம்.

இந்தியாவில் ஆன்லைன் வர்த்தகம் மிகப்பெரிய அளவில் இன்று வளர்ந்து... சிறு. குறு, நடுத்தர சில்லரை வணிகர்களின் வாழ்வாதாரத்தை தற்பொழுது கேள்விக் குறியாக்குவதால்... ஆன்லைன் வர்த்தகத்தில் சில்லறை வணிகம் செய்யும் வணிகப் பொருட்களை விற்பனைக்கு ஒன்றிய அரசு இத்தருணத்திலும் அனுமதிக்க கூடாது என விரைந்து சட்டம் இயற்றவும் வேண்டுகிறோம்.

ஏழை, எளிய, நடுத்தர மக்களுக்கு கிடைத்த அட்சய பாத்திரம்... 'வணிகர்களின் பாதுகாவலர் நூற்றாண்டு நாயகர் தலைவர் கலைஞர் அவர்களின் திருப்பெயரை எழும்பூர் ரயில் நிலையத்திற்கு சூட்டி மகிழ வேண்டும் என பாரதப் பிரதமர் அவர்களை தி.மு.கழக வர்த்தகர் அணியின் சார்பில் உணர்வுடனும் உரிமையுடனும் கேட்டுக் கொள்கிறோம்.

உணவுப் பாதுகாப்பு தர நிர்ணயச் சட்ட உரிமம் தற்பொழுது 12 மாதங்களுக்கு வழங்கப்படுகிறது. இத்தருணத்தில் 11 வது மாதத்திலேயே உரிமத்தை புதுப்பிக்க வில்லை என்றால் ஒவ்வொரு நாளுக்கும் 100 ரூபாய் அபதாரம் விதிக்கப்படுகிறது. உரிமத்தை 12 மாதங்களுக்கு ஒன்றிய அரசு வணிகர்களிடம் அளித்துவிட்டு 11வது மாதம் முதல் அபதாரம் விதிப்பது சட்ட விதிகளுக்கு முரணாக உள்ளது. இந்த விதிமுறை வணிகர்களின் வாழ்வாதாரத்திற்கு மிகவும் கேள்விக்குறியாக அமைகின்றது. எனவே உணவுப் பாதுகாப்பு தர நிர்ணயச் சட்ட விதிகளை முழுமையாக 12 மாதம் வரை அபராதம் விதிக்க மாட்டோம் என ஒன்றிய அரசு ஆணை பிறப்பிக்க இதன் மூலம் வேண்டுகிறோம்.

தலைநகர் சென்னையில்... சிறிய மற்றும் நடுத்தர வணிகர்கள் கடைகளுக்கு வெளியில் குப்பை சேமிப்பு பெட்டி வைக்கவில்லை என கூறி பெருநகர மாநகராட்சி அதிகாரிகள் வணிகர்களிடம் 500 முதல் 5000 வரை உடனடி அபதாரம் விதித்து வருகிறார்கள்... இதனால் சிறிய நடுத்தர வணிகர்கள் பெரிதும் பாதிப்புக்கு உள்ளாகின்றனர். எனவே வணக்கத்திற்குரிய பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் அவர்கள் நகரமும் தூய்மையாக இருக்க வேண்டும் அதே வேளையில்... தவறு செய்யாத வணிகர்களும் பாதிக்கப் படக் கூடாது என இப்ப பிரச்சனைக்கு நிரந்தர தீர்வு காண வேண்டுகிறோம்.

திருச்சி, கோவையில் தலைமை கழக உத்தரவுப்படி கலை இரவு நிகழ்ச்சி நடத்திட உறுதுணையாக இருந்த அனைத்து நிர்வாகிகளுக்கும் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட இயக்குநர் பாக்கியராஜிக்கும் நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

கூட்டத்திற்கு வந்தவர்களை கோவை மாட்ட மாநகர் அமைப்பாளர் மாரிச்செல்வன் வரவேற்றார். சென்னை மேற்கு மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர் விஜயராஜ் நன்றியுரை கூறினார். வேளாண்விளைபொருட்கள் மீதான செஸ் வரியை ரத்து செய்து அரசாணை வெளியீடு செய்த நமது முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களுக்கு இம்மாமன்றம் நன்றி தெரிவிக்கிறது.

இந்த அரசு மக்களுக்கான அரசு எனும் மாண்பை பெற்றிருக்கின்ற அரசு என்பதை மீண்டும் காட்டும் வகையில், வணிகர்களை நெருக்கடிக்கு உள்ளாக்கி வந்த டெஸ்ட் பர்ச்சேஸ் நடைமுறையை முறைப்படி விழிப்புணர்வு ஏற்படுத்தும் வரை நடைமுறை படுத்தமாட்டோம். சிறுகுரு வணிகர்களை எவ்வகையிலும் சட்ட நடவடிக்கைகளை பாதிக்கவிடமாட்டோம் எனவும் உறுதி அளித்த தமிழக முதல்வரு க்கும். வணிகவரித்துறை அமைச்சருக்கும் எங்கள் பாராட்டையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்தில் உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர் அமைச்சர் கோவி.செழியன், கோவைமாரி செல்வன், பழஞ்சூர் செல்வம், மதுரை தன செல்வம், ராமர், கோவை வேலுசாமி, நெல்லை ரஹ்மான், சங்கர், நெல்லை முத்துகுமார், பி.டி.பாண்டிச் செல்வம், வி.பி.மணி, முத்து செல்வி, நாமக்கல் மூர்த்தி, மீஞ்சூர் பாஸ்கர், கோவை ராமர், புதுகை குத்து, புதுகை குழந்தை, அரியலூர் செல்வராஜ், மதுராந்தகம் தினகர், காஞ்சிபுரம் ரவி,மயிலை பாலு,மயிலை சீனிவாசன், இராணிப்பேட்டை சீனிவாசன், தியாகராஜன், கலைக்குமார், ஜெயசீலன், சரவணகுமார், ஷாஜகான், ராஜா, முருகன், வெங்கடேசன், பன்னீர்செல்வம், வெங்கடேஷ், பெரியசாமி, கி.ருஷ்ணன், விஜய்மணி, விஜயபாலன், விஜய்ராஜ், தனசேகரன், குணசேகரன், சுரேஷ்பாபு, ரகமத்துல்லா, சுப்பிரமணியம், சந்திரசேகர், ரியாகராஜன், சுதாகரன், ரவிச்சந்திரன், துரைசாமி,சாலமன் மோட், ஆறுமுகமகேஷ், அழகேசன், திருமூர்த்தி, பி.ஆர். சிங்காரம், ராமச்சந்திரன், தமிழ்மணி, ஏழுமலை, பொன்ராஜ், ரகுநாதன், மோகன் அருண்குமார், ராஜேந்திரன், முருகன், மா.சுப்பிரமணியம், சிப்ஸ்மணி, திருவேங்கிடசாமி, நீலராஜன், பாண்டிதுரை, குலோத்துங்கன், சின்னசாமி, தங்வேல் ஆகியோர் கலந்து கொண்டனர்.